RECEIVED 1980-3-14 PERIODICALS DIVISION LIBRARY

சுத்தத்திற்கும் சுவைக்கும் புகழ்பெற்ற
சைவ ஹோட்டல்
தேவி விலாஸ்
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவ போசனகாரர்
மனதில் என்றும்
தேவி விலாஸ்
(வண்ணைச் சிவன்கோவில் சந்தி)
288 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 | மாசி 1 | ரபி-ஆகி 26 | இதழ் 31
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 14-3-80

RECEIVED 1980-3-14 LIBRARY

## பிரதி ஆணையாளர் படுகொலை!

[கொழும்பு]

கூட்டுறவுத் திணைக்கள பிரதி ஆணையாளர் தி. பெரேரா ஞெலோ [47 வயது] படு கொலை செய்யப்பட்டுள்ளார்,

இரத்மலானையிலுள்ள அவரது வீட்டில் கடந்த 9-ம் திகதி காலையில் நுழைந்த இருவர் அவரிடம் வேலைதருமாறு வற்புறுத்தியதாகவும் இதே நபர்கள் இரவுவேளை அவரைக் கத்தியால் பல தடவைகள் குத்தியாதாகவும்

(8-ம் பக்கம் பார்க்க)

### ★ இலங்கையின் எந்தப் பகுதியிலும்; எந்த நீதிமன்றத்திலும் ★

# தமிழில் மனுக்கள் தாக்கல் செய்யலாம்! உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பு

## நீதிஅமைச்சரின் அறிவிப்பு

### அவரது அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாம்

(கொழும்பு)

**இலங்கையின் எந்தப் பகுதியிலும் உள்ள, எந்த நீதிமன்றத்திலும் தமிழில் மனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது,**

கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவரும், வீட்டுச் சொந்தக்காரருமான கே. சண்முகரத்தின ஐயர், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல்செய்த வழக்கொன்றில், அதே பகுதியைச் சேர்ந்த வாடகைக் குடியிருப்பாளரான திருமதி வள்ளியாச்சி குமாரசாமி பதில் மனு ஒன்றைத் தமிழில் தாக்கல் செய்தபோது, தமிழில் மனுவைத் தாக்கல்செய்யமுடியாதென்று கூறி, அதனை நிராகரித்து, பதில் மனுவைச் சிங்களத்தில் தாக்கல்செய்யுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டது,

ஆனாலும், இதில் அரசமைப்புச் ஷரத்துக்கு பொருள் விளக்கம் பெறவேண்டிய அவசியம் இருப்பதால் இவ்விவகாரத்தை உயர் நீதிமன்றத்தின் விசாரணைக்கு அப்பீல் நீதிமன்றம் பாரப்படுத்தியது.

இந்த வழக்கு விசாரணை கடந்த மாதம் 27ந் திகதி எடுக்கப்பட்டபோது திருமதி வள்ளியாச்சி குமாரசாமியின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. சி. தியாகலிங்கம் ஜூ. வி. புதிய அரசமைப்பின் 24 (2)வது ஷரத்தின் பிரகாரம் நாட்டின் எந்தவொரு நீதிமன்றத்திலும் தமிழில் அல்லது சிங்களத்தில் மனுக்களைத் தாக்கல்செய்யலாம். நீதிமன்ற நடவடிக்கைகளிலும் இந்த இரண்டு மொழிகளிலும் பங்குபற்றலாம் என்று கூறினார்,

வீட்டுச் சொந்தக்காரர் கே. சண்முகரத்தினஐயரின் (வழக்

(8-ம் பக்கம் பார்க்க)

## திரு. யோகேந்திரா மீதான சுதந்திரன் வழக்கு

### தவறான செய்திக்கு வருத்தம்

"யோகேந்திரா மீதான சுதந்திரன் வழக்கை கைவிட முடிவு" என்ற தலைப்புடன் 'ஈழநாடு' வாரமலர் (10-2-1980) இதழில் முதல் பக்கத்தில் வெளிவந்துள்ள செய்தியில் தவறு ஏற்பட்டிருப்பது எமது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அச்செய்தியில், 'உயர் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ரத்வத்தை, ரணசிங்க ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது தடுத்து வைக்கப்பட்ட சுதந்திரன் பத்திரிகையை வழக்காளிக்கு திருப்பிக் கொடுப்பதாக எதிர்மனுதார் சார்பில் ஒப்புக்கொண்டதை அடுத்தே வழக்கை கைவிடுவதாக தீர்மானிக்கப்பட்டது. இம்மாதம் 22ம் திகதி நீதிமன்றத்தில் குறிப்பிட்ட பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டு மனுதாரிடம் ஒப்படைக்கப்படும்" என்று இருப்பது தவறு என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1979 அக்டோபர் 3ம்திகதி யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி வீதி 19ம் இலக்கத்தைச் சேர்ந்த கோவை மகேசன் என்றழைக்கப்படும் மகேஸ்வரன் என்பவர் இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசருக்கும் ஏனைய நீதியரசர்களுக்கும் ஒரு முறையீட்டு மனுவை சமர்ப்பித்திருந்தார். அந்த மனுவில் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரும் யாழ். நிர்வாக மாவட்டத்தின் அப்போதைய தகுதிவாய்ந்த அதிகாரியுமான யோகேந்திரா துரைசுவாமியால், 1979 செப்டம்பர் 19ம் திகதிய சுதந்திரன் பத்திரிகைகளைப் பறிமுதல் செய்யும்படியும் அதனை விநியோகம் செய்வதைத் தடைசெய்தும் தகுதிவாய்ந்த அதிகாரியின் எழுத்து மூலமான அங்கீகாரம் இன்றி அப்பத்திரிகையை மேற்கொண்டும் பிரசுரிக்கவேண்டாமென எச்சரிக்கை செய்தும் விடுக்

(8- ம்பக்கம் பார்க்க)

## ஒஸ்மானியா மாணவர்கள் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஒஸ்மானியா கல்லூரி மாணவர்கள் நேற்று இரண்டாவது தினமாக வகுப்புக்களை பகிஷ்கரித்தனர்!

உயர் வகுப்பு மாணவர்கள் மட்டுமே நேற்று வந்திருந்த போதிலும், பாடசாலைகளுக்கு வெளியில் எந்தவித ஆர்ப்பாட்டமும் இடம் பெறவில்லை.

பாடசாலைக்கு வந்த மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லாது வெளியில் நின்றுவிட்டு, சென்றுவிட்டனர். [க]

### பிரதமர் விஜயத்தின் எதிரொலி:

## கோட்டைப் பகுதி திருத்தப்படுகிறது!

[யாழ்ப்பாணம்]

பிரதமர் ஆர். பிரேமதாசாவின் முதலாவது உத்தியோக பூர்வ யாழ். விஜயத்தையொட்டி கோட்டை பகுதிகளில் திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கோட்டைக்கு உள்ளும் வெளியிலும் துப்பரவு செய்யும் வேலையில் இளைஞர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

யாழ், தொல்பொருள் பகுதியினர் இத்திருத்தவேலைகளை மேற்பார்வைசெய்து வருகின்றனர். (க)

கிழக்கு ஐரோப்பா,
மத்திய கிழக்கு
செல்ல விரும்புகிறீர்களா?
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்!
சில இடங்கள் மட்டுமே உள்ளன.
உடனே பதிவுசெய்யுங்கள்.
ஏப்ரல் நடுப்பகுதியில் இச்சுற்றுலாக் கோஷ்டி புறப்படும்.
பாஸ்போர்ட். விஸா ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.
மேலும் விபரங்களுக்கு:
வதனி ரவல்ஸ்
5, கற்பகவிநாயகர் வீதி,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். 5220

### ★ யாழ். மணிக்கூடு கோபுரம்:

## திருத்த வேலை தடைப்பட்டதன் மர்மம் என்ன?

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுர திருத்த வேலைகள் இடை நிறுத்தப்பட்டதன் மர்மம் என்ன என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டும் என்று யாழ். மாநகரசபை உறுப்பினர்களில் [illegible] தெரிவிக்கப்படும் அதே நேரத்தில் யாழ். மாநகரசபையின் புதிய பொறியிலாளர் வந்த பின்னரே வேலைகள் ஆரம்பமாகும் என்றும் கூறப்படுகிறது.

இதேசமயம் இது அடிமைச்சின்ன மென்றும் இதனை முற்றாக அகற்ற வேண்டுமென்றும் இதன் திருத்த வேலைக்கு செலவிடும் பணத்தை வேறு அபிவிருத்தி வேலைகளுக்கு செலவிடலாம் என்ற கருத்தும் யாழ். மாநகரசபை உறுப்பினர்களில் ஒரு சிலர் மத்தியில் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

மணிக்கூட்டுக் கோபுரம் திராவிட சிற்பக்கலை அம்சம் பொருந்தியதாக அமைக்கப்பட வேண்டுமென்றும் சில உறுப்பினர்கள் விரும்புகின்றனராம்.

மீண்டும் மதிப்பீடு செய்யப்படும் போது இப்படியான புதிய பிரச்சனைகள் எழக்கூடும் என்று மாநகரசபை வட்டாரங்களில் பேசப்படுகிறது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

G. C. E. சாதாரண வகுப்பு ஆங்கில இலக்கண இலக்கியம் (English Literature) ஆங்கிலப் பேச்சு (Spoken English) தனிப்பட்ட முறையாயும், வீடுகள் சென்றும் கற்றுக் கொடுக்கப்படும். தொடர்பு: விளம்பர இல:5164, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 5164

### தேவை

யாழ்ப்பாணத்தில் ஓர் வியாபார ஸ்தாபனத்திற்கு, தட்டெழுத்து, கணக்கியல் பொருட்கள் இருப்பு கணக்கு போன்றவற்றில் முன் அனுபவமும் ஜி. சி. ஈ. (சாதாரணம்) சித்தி அடைந்த திருமணமாகாத பெண்பாலாரிடமிருந்தும், வியாபார அறிவாற்றலும், ஜி. சி. ஈ. (சாதாரணம்) சித்தியடைந்த நல்லொழுக்கமுள்ள ஆண்பாலாரிடமிருந்தும் கிளார்க், கவுண்டர் கிளார்க் பதவிகளுக்கும், 22 வயதிற்குட்பட்ட வேலை பழக விரும்பும் இளைஞர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் 20-3-80 முன்னர் கோரப்படுகின்றன. விளம்பர இல்: 5199 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5199

கைத்தறி நெசவு தெரிந்த பெண்பிள்ளைகள், தையல், சேலைகளுக்கு குஞ்சம் முடிதல், மற்றும் சிறிய வேலைகள் தெரிந்த பெண்பிள்ளைகளும் தேவை. நேரில் வரவும். அன்னம்ஸ் சாறிவேக்ஸ், 27/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (5204)

### விற்பனைக்கு

நல்லஇனமுந்திரிகை [Grape கன்றுகள் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: அண்ணா பாம், இணுவில். 5206

## பொருட்காட்சி

(புலோலி)

தென்புலோலியூர் புற்றளை மகாவித்தியாலய விஞ்ஞான, கணித, விவசாய, வர்த்தக, கலை கைப்பணி தொழில்நுட்ப ஒன்றிணைந்த பாடத்திட்டப் பொருட்காட்சியை வடமராட்சி தெற்கு மேற்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு மு. தம்பிமுத்து சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார். இப்பொருட்காட்சி வித்தியாலய அதிபர் திரு. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலையின் ஒன்றிணை கல்விப் பொருட்காட்சியை யாழ் பிரதம கல்வியதிகாரி திரு. டபிள்யூ. ஆர். அருளையா திறந்து வைத்தார். பாடசாலை அதிபர் திரு. ஏ. கே. மாணிக்கம் பொருட்காட்சிக்குத் தலைமை வகித்தார்.

......

## தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் திருயணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெவிருக்கிறது.

நண்பகல் துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவும், அதைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும்.

இரவு அளவையூர் அருட்கவி சீ. விநாசித்தம்பி 'பார்வதி கல்யாணம்' என்னும் பொருள் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (கொ-அ)

## யாழ். மாநகராட்சி மன்றம்

### வீதி வேலைப் பொருட்களுக்கான

## கேள்வி அறிவித்தல்

1. கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் கல், மண் முதலியவற்றை விநியோகிப்பதற்கான கேள்விகள் எம்மால் 27-3-80 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

அ. சி. பொன்னம்பலம் வீதி
ஆ. கஸ்தூரியார் வீதி
இ. சேர்க்குலர் வீதி
ஈ. சிவன்பண்ணை வீதி
உ. மணிக்கூட்டு வீதி
ஊ. முனீஸ்வரன் வீதி
எ. விக்ரோறியா வீதி

2. கேள்விகள் யாழ். மாநகர மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 26-3-80 பிற்பகல் 2-00 மணி வரை பெறக்கூடிய பத்திரங்களில் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. மேலதிக விபரங்களுக்கு யாழ் மாநகர மராமத்துப் பகுதியினருடன் தொடர்பு கொள்ளவும்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
11-3-80. 5213

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கட்டாக்காலி நாய் பிடிப்பவர் பதவி

(தற்காலிகம்)

இம்மாநகராட்சிமன்றத்தின் சுகாதாரப் பகுதியில் கட்டாக்காலி நாய் பிடிப்பவராகக் கடமை புரிவதற்கு விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் 40 வயதுக்கு உட்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

பிடிக்கும் ஒவ்வொரு நாயையும் கடல் நீரில் அமிழ்த்திக் கொல்லல் வேண்டும். [illegible]த் தாங்கள் கோரும் கட்டணத்தை விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது வயது, அனுபவம் முதலியவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு 25-03-80-ந் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தமது விண்ணப்பத்தை பதிவு அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
10-3-80. (5214)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 1ம் திகதி
14-3-1980 வெள்ளிக்கிழமை

மேடம்: மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தவும் குடும்பத்திலும் பூசல்கள் தோன்றிமறையும். தொழிலிலும் தொல்லைகள் உருவாகும்.

இடபம்: வாகனச் சொந்தக்காரர் ஆதாயம் பெறுவர். எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். உத்தியோகச் சிறப்புமுண்டாம்.

மிதுனம்: பொருளீட்டுவதில் புதியவழிகளைக் கையாளுவீர்கள். வெளியிடத்து தொடர்பு மகிழ்ச்சி அளிக்கும். புத்திரசுகமுண்டு. புண்ணிய விருப்பும் மேலிடும்.

கடகம்: கழுகுப் பார்வை வட்டமிடும். முன்னேற்றத்தை முறியடிப்பதற்கு சிலர் முனைவர். வாகனம் செலுத்துவோர் அவதானம்வேண்டும். பொறுமையே நன்று.

சிங்கம்: குடும்ப வாழ்க்கை இன்று சுகமாக இருக்கும். உறவினரின் ஒத்துழைப்பும்கிடைக்கும். டாக்டர்கள் போற்றப்படுவர்.

கன்னி: எண்ணியதில் ஏமாற்றம் தென்படும். நண்பர்கள் மூலம் நஷ்டமடைவதற்கிடமுண்டு. வியாபாரத்தில் மோசடி நடக்கலாம். நன்றாக சிந்தித்தபின்பு முடிவெடுக்கவும்.

துலாம்: கனிவான நினைவுகள் தலைதூக்கும், நிருவாக உத்தியோகஸ்தர்கள் பெருமையடைவர். தந்தைவழி ஆதரவுமுண்டு.

விருச்சிகம்: துணிவையே துணையெனக்கொண்டு செயலாற்றுவீர்கள். சிலர் வாழ்க்கையில் பொதுசனத்தலைமைக்கும் இடமுண்டு. விவசாயிகள் வாழ்க்கையிலும் முன்னேற்றமுண்டு.

தனுசு: அதிர்ஷ்டகரமான தினம். எத்தொழிலையும் முதலீடு செய்யலாம். மகிழ்ச்சிகரமான சம்பவங்களும் இடம் பெறலாம்.

மகரம்: கடன்படவும் நேரிடலாம். வேதனை தரும் சம்பவம் ஒன்றும் இடம்பெறலாம். கடமைபுரியுமிடத்திலும் சச்சரவுகள் தோன்றும்.

கும்பம்: அவசரம் வேண்டாம். கருத்துவேற்றுமைகளைத் தவிர்த்துக்கொள்ளவும். துதி பாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவர்.

மீனம்: மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும் வருமானத்திலும் உயர்ச்சியுண்டு. இனிமையான சம்பவமும் இடம்பெறலாம்.

சுபதினம்

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## இன்று நூல் வெளியீடும் சொற்பொழிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் திரு சின்னையா சிவநேசன் எழுதிய "இரு நாடகங்கள்" நூல் வெளியீட்டு விழாவும், திரு. என். பாலகிருஷ்ணன் நிகழ்த்தும் "இலங்கையின் இன்றைய பொருளாதார நிலை" சொற்பொழிவும் இன்று வெள்ளி மாலை யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி. அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற இருக்கும் இவ்வைபவத்தில் திரு. சி. மௌனகுரு நூல் வெளியீட்டு உரை நிகழ்த்துவார். திரு. ம. சண்முகலிங்கம், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, திருவாட்டி கலையரசி சின்னையா ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

சொற்பொழிவைத் தொடர்ந்து [illegible] பெறும். (கொ-அ)

## குருக்கள் தேவை

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு குருக்கள் ஒருவர் தேவை. குடும்பத்துடன் தங்குவதற்கு இருப்பிட வசதிகள் செய்துகொடுக்கப்படும். தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். இம் மாதம் 25-ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

கே. பொன்னம்பலம்,
(ஆலய பரிபாலன சபைத் தலைவர்)
(5211) ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

### சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் தரம் 11

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
வயது: 23 — 50

கல்வித்தகைமை:

1. கூட்டுறவுப் பயிற்சியுடன் 3 வருடகால அனுபவமுடைய பட்டதாரி அல்லது
2. இரண்டு வருட கால அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் உயர் தரத் தராதரப்பத்திரம் உடைய பட்டதாரி அல்லது
3. தரம்111 பதவியில்ஒருவருட அனுபவமும், கூட்டுறவு வேலையாளர் உயர்தரத் தராதரப் பத்திரமும் பெற்றுள்ள பட்டதாரி அல்லது
4. 50 லட்சம் ரூபாவினை வருடாந்த மொத்த விற்பனையாகக் கொண்ட வியாபாரத்தாபனமொன்றின் மேல்முகாமைப் பதவியில் 5 வருட கால அனுபவம் அல்லது
5. 10 வருட கால அனுபவம் பொருந்திய முன்னைநாள் கூட்டுறவுப் பரிசோதகர்.

வசிப்பிடத்தகைமை; குறைந்தது கடந்த 2 வருடமாவது யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வேதனம் ரூபா 500/- — 825 அங்கீகரிக்கப்பட்ட
20×10 + 25×5 படிகளும்

விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் -/50 சதம் செலுத்திப் பெற்ற படிவத்தில் பூர்த்தி செய்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்விச்சான்றிதழ், தொழிற் தகைமைச் சான்றிதழ், வசிப்பிட அத்தாட்சிப்பத்திரம், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொதுமுகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 29-3-80க்கு முன் கீழ்க்காணும் விலாசத்தில் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

த. ச. சிவநாராயணமூர்த்தி,
சாவகச்சேரி, தலைவர்,
12-3-80. சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்.
5215

## கே. ஜி. எக்ஸ்பிரெஸ் பஸ் சேவை

சாயக்கூடிய, வசதியான, ஆடம்பரமான பஸ்கள் தினசரி கீழ்க்கண்ட இடங்களிலிருந்து புறப்படும்:

### கொழும்பு / யாழ்ப்பாணம்

வெள்ளவத்தை மாணிக்க விநாயகர் கோவிலடி
லோரன்ஸ் ரோட் — இரவு 7-30 மணி
கோட்டை புகையிரத நிலையம் — இரவு 8-00 மணி

### யாழ்ப்பாணம் / கொழும்பு

வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம் இரவு 8-00 மணி
முன்பதிவு செய்யும் இடங்கள்:
இராஜேஸ்வரி ஹோட்டல்,
69, நொறிஸ் ரோட், கோட்டை.
தொலைபேசி: 25939 பிற்பகல் 2-00 மணிமுதல் இரவு 7-00 மணிவரை
பிளாசா தியேட்டர், வெள்ளவத்தை.
தொலைபேசி: 88070 பிற்பகல் 1-30 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
காமினி தியேட்டர், மருதானை
தொலைபேசி: 93810 காலை 9-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை
வெலிங்டன் தியேட்டர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 559 காலை 8-00 மணிமுதல் இரவு 10-00 மணிவரை

கட்டணம் ரூ. 50 - (ஒரு வழி மட்டும்)

பயணம் செய்யும் போது பணத்தை உங்களுடன் எடுத்துச் செல்லவேண்டியதில்லை. கீழ் குறிப்பிட்ட இடங்களி உங்கள் பணத்தை ஒப்படைக்கவோ பெற்றுக் கொள்ளவோ முடியும்.

★ பிளாஸா தியேட்டரில் ரூபா 1000/-க்கு உட்பட்ட தொகை ஒப்படைக்கவோ அல்லதுபெற்றுக் கொள்ளவோ முடியும்

கே. ஜி. இன்டஸ்ரீஸ்,
ஸ்ரீ சங்கராஜமாவத்தை,
கொழும்பு.
வெலிங்டன் தியேட்டர்,
யாழ்ப்பாணம்.

எத்தொகையும் ஒப்படைக்கவோ பெற்றுக்கொள்ளவோ முடியும்

★ காலை 6 மணிக்கு பஸ்கள் கொழும்பு/யாழ்ப்பாணம் சென்றடையும். 5133

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஒரு பக்தன் எப்பொழுதும்கடவுளுடன் கலந்திருக்கிறான்.
— மகாத்மாகாந்தி

## மக்கள் கருத்து

### கப்பல் மூலம் இந்தியப் பயணம்

கப்பல் மூலம் இந்தியா செல்லும்-பிரயாணிகளுக்கோ, அவர்களின் உடைமைகளுக்கோ போகும்போதும் சரி வரும்போதும்சரி நலைமன்னாரில் பாதுகாப்பில்லை. போக்குவரத்து அமைச்சர், பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் தலைமன்னார் சென்று பார்த்தும் நிலைமை மாறவில்லை பிரயாணிகள் மணித்தியாலக்கணக்கில் காத்திருந்தும் போக்குவரத்துச் சாதனங்கள் கிடையாது. சிறந்த சாப்பாட்டுக்கடை கிடையாது.

இவற்றையெல்லாம்விட 'காக்கி' உடையைக்கண்டால் கிலி ஏற்படக்கூடியநிலை. சுங்கப் பகுதியினர் தாங்கள்தான் தலைமன்னாரின் முடிசூடா மன்னர் என்ற நிலையில் இயங்குவார்கள்: பயணிகள் மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்படுகிறார்கள் பெரிய அதிகாரிகள் வந்திருந்தால்கூட நிலைமை அதேதான். இக்கொடுமையைவிட கப்பல் சேவை இல்லாமல் இருந்தால்கூட பரவாயில்லை. போகாமலே இருந்துவிடலாமல்லவா? ஒருவழியாக கப்பலில் தவமிருந்து இராமேஸ்வரம் சென்றடைந்தால் அங்கும் சுங்கப் பகுதியினர், போர்ட்டர்களின் தொல்லையைத்தாங்கவேண்டும் தற்போது சேவையிலுள்ள சில இளைஞர்கள் மனிதத் தன்மையுடன் நடந்து கொள்கிறார்கள், ஏனையவர்கள் தான் தோன்றித்தனமாகவே நடந்து கொள்கிறார்கள். எல்லோரும் கள்ளக்கடத்தல் காரர்கள் என்ற நினைப்பில்தான் நடத்தப்படுகிறார்கள். எமது வரிப்பணத்தில் வயிறுவளர்க்கும் இந்த 'கீழ்ப்படிவுள்ள ஊழியர்கள்' ஏன் இப்படி நடந்து கொள்கிறார்கள் என்று அரசு கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கே. வி. திருவரசன்,
புலோலி தெற்கு,
புலோலி.

* * *

### கீரிமலை-கொடிகாமம் பஸ் சேவையை விஸ்தரிப்பார்களா?

யாழ். பஸ் சாலையினால் கீரிமலையிலிருந்து கொடிகாமம் வரை நடைபெற்றுவரும் பஸ் சேவை திறம்பட நடைபெற்று வருவது வரவேற்கக்கூடியது. ஏறக்குறைய முக்கால் மணித்தியாலத்திற்கொரு பஸ்ஸாவது கொடிகாமம் வந்து கொடிகாமம் பஸ்தரிப்பு நிலையத்தில் சுமார் இருபது நிமிடங்கள் தங்கியே கீரிமலைக்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ புறப்படுகின்றது.

கொடிகாமத்திற்கும் எழுதுமட்டுவாளுக்குமிடையே இடைத்தூரம் நான்குமைல்களாகும். அந்த இடைப்பட்ட பகுதியில் மிருசுவில், தவசிகுளம், மிருசுவில் வடக்கு, மிருசுவில் படித்த மகளிர்குடியேற்றத்திட்டம், ஒட்டுவெளி, கரம்பகம், எழுதுமட்டுவாள் ஆகிய இடப்பிரிவுகளுள்ளன. இப்பகுதிகளில் ஏராளமான பஸ் பிரயாணிகள் தங்களின் வேலைகளை உடனுக்குடன் செய்யமுடியாது, பஸ் வசதியின்றிப் பெரிதும் சிரமத்திற்குள்ளாகின்றனர். தயவுசெய்து வடபிராந்திய இ. போ சபைத் தலைவர் இவ்விஷயத்தில்கூடிய கவனம் செலுத்தி கீரிமலை-கொடிகாமம் பஸ் சேவையை எழுதுமட்டுவாள்வரைக்கும் நீடிக்குமாறு பணிவுடன்வேண்டுகிறேன்.

கீரிமலையிலிருந்து கொடிகாமம்வரை வரும் பஸ்கள் எல்லாவற்றையும் எழுதுமட்டுவாள் வரைக்கும் சேவையிலீடுபடுத்த முடியாவிட்டாலும் கொடிகாமம் வந்து திரும்பும் பஸ்களில் சிலவற்றையாவது எழுதுமட்டுவாள்வரை சேவையிலீடுபடுத்தி எங்கள்குறைகளை போக்குமாறுவேண்டுகின்றேன்.

செ. மரியாம்பிள்ளைநாதன்,
மிருசுவில்.

# "மாணவர் பிரச்னை தீர்ந்துவிடும் என நினைப்பது கனவே"

## -- பேராசிரியர் பாலன் செல்லையா

(சுழிபுரம்)

''வாழ்க்கையில் ஒருவன் முன்னிலைக்கு வருவதற்குப் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல வேண்டும் என்பதில்லை. தன்னம்பிக்கையுடன் தனது வாழ்வை அமைத்துக் கொண்டால், அதுவே அவனது வாழ்வின் வெற்றிக்குத் திறவுகோலாகும். பல நூறுமாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றுக்கொண்டால் மாணவர்கள் பிரச்னை தீர்க்கப்பட்டுவிடும் என்று யாரும் கருதுவார்கள். ஆனால் அது ஒரு கனவாகவே முடிந்துவிடும். எம்மிடம் நிறைந்திருக்கும் தன்னம்பிக்கை தான் வாழ்வின் தேவையையும் நாட்டுக்கு வேண்டியவற்றையும் நிறைவு செய்துவிடும். நான் உலக நாடுகள் பலவற்றுக்குச் சென்றுள்ளேன். ஆராய்ந்திருக்கின்றேன் தன்னம்பிக்கையுடன் வாழ்பவன் தான் சிறப்பாக வாழ்வதைக் கண்டுள்ளேன். ஆகவே மாணவர்கள் கல்வியைக் கற்பதுடன் தன்னம்பிக்கையுடன் முன்னேறவேண்டும்''.

இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உயர்தர மாணவ ஒன்றியத்தின் 17வது வருடாந்த இராப்போசன விருந்து வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக புள்ளிவிபர இயல் பேராசிரியர் பாலன் செல்லையா குறிப்பிட்டார். கல்லூரித் திறந்தவெளியரங்கில் நடைபெற்ற இவ்வைபவத்திற்கு மாணவ ஒன்றியத்தின் தலைவர் செல்வன் ந. குணபாலன் தலைமை வகித்தார். பிரதமர் விருந்தினராக யாழ். மாவட்ட அமைச்சு செயலக மாகாண தொழில் நுட்ப ஆலோசகர் திரு. ஆ. இராசபட்சம் கலந்து கொண்டார்.

திரு.இராசபட்சம்பேசுகையில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் கல்விகற்று இன்று உயர்ந்த பதவியை வகிக்கும் நாம் எமது கல்லூரியை என்றும் மறக்கவில்லை என்றும் இக் கல்லூரியில் கல்வி கற்றவர்கள் அதியுயர்ந்த பதவிகளை வகித்தும், வகித்துக் கொண்டும் இருப்பதைக்காண முடிகிற தென்றும் பண்டாரநாயக்கா சர்வதேசமாநாட்டு மண்டபத்திற்குத் திட்டமிட்ட பிரதம பொறியியலாளர் திரு. எஸ். தாமோதரலிங்கம், முன்னாள் தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், இன்று எதிர்க்கட்சித் தலைவராக விளக்கும் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரும் இக் கல்லூரியில் பயின்றவர்களென்றும் இவர்களைப் போல் இங்கு கல்விகற்கும் ஒவ்வொருவரும் ஊக்கத்துடனும் தன்னம்பிக்கையுடனும் கல்வி கற்று முன்னேற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில் வடிவேல் பேசுகையில் உயிரற்ற சந்தோர் வேலைகளை தினமும் செய்யும் நாம். உயிருள்ள மாணவர் ஒன்றிய விருந்தில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. க. அருணாசலம், செல்வன்கள் க. மனோகர், அ. சோதிரூபன், சி. இன்பபாலன், மு. சிவராசா ஆகியோரும் பேசினர்.

# தவக்கால நற்சிந்தனை



"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்.''

(பிலிப்பியர் 4:6-7)

நாம் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. நம் வேண்டுகோள் எதுவாக இருந்தாலும் உத்தமமான மனதுடனே, மெய்யான விசுவாசதுடனே, பரிசுத்தமான பிரார்த்தனையுடனே ஆண்டவரிடம் மன்றாடிக் கேட்போமேயானால் அந்தக் கருணைக்கடல் நமக்குக் கட்டாயம் கடைக்கண் கருணை அளிப்பார் என்று வேதம் சொல்லுகிறதல்லவா! செய்தோமா நாம்! நம் தேவைகள், ஆசை அபிலாசைகள், ஆன்ம நிறைவுகள் எப்படி எப்படி உருவாக்கி வைத்திருக்கிறோம்? சற்றே சிந்தித்துப் பாருங்கள்!

உலக ஆசைகளினால் நிரம்பப்பெற்ற நாம் அதி உன்னத பெருமைக்குரிய ஆண்டவரின் முள்முடியைப் பார்க்க, அதன் நிழலிலே ஒதுங்க - நம் சிரம் தாழ்த்தி வணங்க எண்ணங் கொண்டோமா?

-ஞானஒளி

'இ. போ. ச. ஊழியர்கள்

# கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் செயல்பட வேண்டும்"

## அலுவலக திறப்பு விழாவில் 'அமிர்'

(புலோலி)

''வாழ்கைச் செலவு அதிகரித்து வரும் இவ்வேளையில் பொதுமக்களுக்கு இன்றியமையாத போக்குவரத்துச் சேவையை வழங்கிவரும் இ. போ. ச. ஊழியர்கள், பல்வேறு கஷ்டங்களை அனுபவித்துவருவது ஒப்புக்கொள்ளக்கூடியதே. மாதச் சம்பளம் பெறும் தொழிலாளர்கள் பொதுவாக இத்தகைய பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளனர்''

இவ்வாறு பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவில் நடைபெற்ற ஊழியர்மன்ற அலுவலகத் திறப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை இ. போ.ச. ஊழியர் மன்றத் தலைவர் திரு. கே. கண்ணுத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஊழியர் மன்ற அலுவலகத்தை வடபிரதேச போ. ச. தலைவர் திரு. டட்லி குணசேகரா சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார். இவ் வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேலும் குறிப்பிட்டதாவது:

''இலங்கை போக்குரத்துச்சபை ஊழியர்களின் வசதியீனங்கள் நீக்கப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவதற்குநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஊழியர்களும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, சமூக சேவை மனப்பான்மை என்பவற்றுடன் செயற்படவேண்டும்.

''வடபிராந்திய போ.ச. தலைவர் திரு. டட்லி குணசேரா இப்பகுதியின் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள துரிதமுயற்சிகளைஎடுத்துவருகிறார். அவரின் நடவடிக்கைகள் வெற்றி பெற்று சிறந்த போக்குவரத்து வசதிகள் ஏற்பட வடபகுதி எம். பீக்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கிறார்கள். அண்மையில் ஜனநாயகரீதியில் தெரிவுசெய்யப்பட்ட ஊழியர் மன்ற அங்கத்தவர்கள் எந்தத் தொழிற்சங்கத்தில் அங்கம் வகித்தாலும் அவர்கள் தமது பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள ஒற்றுமையாக செயல்படவேண்டும்'' என்று கூறினார்.

### இ. போ. ச. தலைவர் பேச்சு

ஊழியர்மன்ற அலுவலகத்தைத் திறந்துவைத்து உரையாற்றிய வடபிரதேச போ. ச. தலைவர் திரு. டட்லி குணசேகரா உரையாற்றுகையில் கூறியதாவது:

''ஊழியர்களுக்கும் முகாமைக்குமிடையே பரஸ்பரம் நல்லுறவும் சேவைமனப்பான்மையும் ஏற்படும்போது தான் சிறந்த நிர்வாகத்தை நடத்தி பொதுமக்களுக்குத் தேவையான சேவையை அளிக்கமுடியும்; இதனைக் கருத்திற்கொண்டு வடபிரதேச போ. ச. பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்தமாதம் தொடக்கம் வடபிராந்திய போ. ச. வில் சமயாசமய போக்குவரத்துச்சபை ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். இவர்களுக்கு இரண்டு வருடத்திற்கொரு முறை சம்பள உயர்வு வழங்கப்படும். மிக அண்மைக் காலத்தில் நியமிக்கப்பட்ட 60 ஊழியர்களுக்கு மட்டும் வேலைவங்கியின் அனுமதி பெறப்பட்டபின்னரே அவர்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்'' என்று கூறினார்.

எதிர்க்கட்சித்தலைவர்திரு.அ. அமிர்தலிங்கம் வடபிராந்திய போ. ச. தலைவர் திரு. டட்லிகுணசேகரா ஆகியோரை பருத்தித்துறை இ. போ ச ஊழியர்மன்றத் தலைவர் திரு கே கண்ணுத்துரை மாலையணிவித்து வரவேற்றார். இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் திரு. வி. ஸ்ரீஸ்கந்தராசா வரவேற்புரைநிகழ்த்தினார்.

"தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க

# பாத்திமுறையை விடுத்து வாய்க்கால் முறையை பின்பற்றுக"

(மாவிட்டபுரம்)

''இதுவரைகாலமும் விவசாயிகள் உபயோகித்த கிருமிநாசினிகள் சிலசமயங்களில் அவர்களது 'உயிருக்கே ஆபத்து விளைவிக்கக் கூடியனவாக இருந்து வந்துள்ளன. ஆனால் புதிதாக அறிமுகப்படுத்தப் படவுள்ள கிருமிநாசினிகள் மக்களது. உயிருக்கு எவ்வித ஆபத்தையும் ஏற்படுத்தமாட்டாது. அவை பயிர்களில் காணப்படும் கிருமிகளைநோய் வாய்ப்பட்டு இறக்கச் செய்யும் தன்மை கொண்டவை. இப்புதிய ரக கிருமி நாசினிகள் பாவனைக்கு வந்ததும் விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர்.''

இவ்வாறு மாங்கொல்லை இளைஞர் முன்னேற்றமன்ற சனசமூக நிலையம் நடத்திய "விவசாயிகளது எதிர்காலம்'' என்னும் தலைப்பிலான விவசாயக் கருத்தரங்கில் கலந்து பேசிய கீரிமலை விவசாயசேவை நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். பாலசுந்தரம் கூறினார்.

நிலையத் தலைவர் திரு. ச. கணபதிப்பிள்ளை தலைமையில் நிலைய மண்டபத்தில் நடந்த இக்கருத்தரங்கில் அவர் மேலும் பேசும்போது கூறியதாவது:-

''இன்று விவசாயிகள் பெரிதும் அனுபவம் உடையவர்களாக விளங்குகிறார்கள். அவர்களுக்கு நாம் எதுவும் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. ஆனால் அவர்கள் கிருமிநாசினிகள் தெளிக்கும்போது அளவுப் பிரமாணங்களைக் கவனிக்காமல் விடுவது நல்லதல்ல. பயிர்களில் நன்மை செய்யக் கூடிய கிருமிகளும் தீமை செய்யக் கூடிய கிருமிகளும் உள்ளன. அளவுக்கதிகமாக கிருமிநாசினிகளைத் தெளிக்கும்போது இரண்டு வகைக் கிருமிகளுமே இறந்து விடுகின்றன. ஆகவே அளவாக மருந்து தெளிப்பதில் விவசாயிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

''எமது விவசாயிகளுக்கு தண்ணீர்ப்பிரச்னை இன்று பெரும் பிரச்னையாகி வருகிறது. நன்னீர்த் தட்டுப்பாடு காரணமாக விவசாயம் பாதிப்படுகிறது. மாதகல் போன்ற பகுதிகளில் சித்திரைமாதத்தின்பின் விவசாயமே செய்ய முடியாத நிலை உள்ளது. ஏனைய இடங்களில் நன்னீர் உவநீராக மாறிவருகிறது. ஆகவே இனிநாம் புதிய முறையில் விவசாயம் செய்யமுன் வந்தால் நீர் தட்டுப்பாட்டை சமாளிக்கலாம் பாத்திமுறை மூலம் விவசாயம் செய்வதை விடுத்து கூடுதலாக வாய்க்கால் வரம்பு முறையைப் பின்

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகாதேவா பாலவேலை விரைவில் ஆரம்பிக்கும்?

(நெல்லியடி)
மன்னார் சங்குப்பிட்டியையும் கேரதீவையும் இணைக்கும் பால வேலைகள் மிகவிரைவில் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிகிறது.

மேற்படி பால வேலைகளைப் பற்றி ஆராயவென நெடுஞ்சாலைகள் அமைச்சின் உயரதிகாரிகள் கோஷ்டியொன்று இப்பகுதிக்கு விஜயம் . செய்திருந்தது.

இக் குழுவினர் இப்பாதையால் நாளாந்தம் பிரயாணம் செய்வோரின் கணிப்பீடொன்றையும் நடாத்தினார்கள். சடந்த பல வருடகாலமாக இப்பாலவேலைகளை ஆரம்பிக்குமாறு வடபகுதி அரசியல் வாதிகளும் சமூகநலன் விரும்பிகளும் அரசாங்கங்களைக் கோரிவருவது குறிப்பிடத்தக்கது. (அ)

## மிகச் சிறந்த மாணவர் போட்டி

(அரியாலை)
1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கைக் கல்விப்பகுதியினரால் நடாத்தப்பட்ட கல்விப் பொதுத் தராதர சதாரண தரப் பரீட்சையில் யாழ். பரி யோவான் கல்லூரியைச் சேர்ந்த ம. ஜெயபாலன், ந. சவுந்தயன், ச. நடேமஷ் ஆகிய மூன்று மாணவர்களும் அகில இலங்கை ரீதியில் அதிக புள்ளிகளைப் பெற்றுச் சித்தி பெற்றமையால் 1979ம் ஆண்டுக்குரிய மிகச் சிறந்த மாணவர் போட்டியில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான இப்போட்டி வடமாநிலக் கல்வித் திணைக்களத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

இப்போட்டிக்கு வடமாநில வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் பொறுப்பாளராகக் கடமையாற்றுவார்.

## பொதுசன நூலக ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)
யாழ்-பொதுசன நூலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் நிர்வாகிகள் வருமாறு: பிரதம போஷகர்: முதல்வர். திரு. இராஜா விசுவநாதன். விஷேட போஷகர்: மாநகரசபை ஆணையாளர். திரு. க. சிவஞானம்' ஆலோசனை, போஷகர். நூலகர் திருமதி. ஆர். நடராசா, தலைவர்: திரு ம. வின்சன் குணாளன் உப. தலைவர்: திரு. அ. டொன் பொஸ்கோ. செயலாளர். திரு அ. யோ, இம்மானுவல். உப செயலாளர்: திரு. க. கணேசலிங்கம், பொருளாளர்: செல்வி. த கந்தையா, செயற்குழு உறுப்பினர்கள்: . திருமதி ம. நித்தியரத்தினம் திருவாளர்கள் பெ சிவபாதசுந்தரம் ஏ. யோசேப் க. சுந்தரலிங்கம்.

## பதவி உயர்வு

(சுன்னாகம்)
சுன்னாகம் விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தில் கொள்வனவு மொத்த விற்பனை நிலையப் பொறுப்பதிகாரியாக இருந்த ஆ. ... குலம் அவர்கள் இயாதபட 10ம் திகதி தொடக்கம் விற்பனை அபிவிருத்தி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். (அ)

## கிராமங்களுக்கு மின்வசதிகள்

(மட்டக்களப்பு)
கற்குடா தொகுதியில் ஏறாவூர் மேற்கு கிராமசபை பகுதியிலுள்ள வந்தாறுமூலை, சித்தாண்டி, கொடுவாமடு, காளியாமடு ஆகிய கிராமங்களிலுள்ள பிரதான வீதிகளுக்கு மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது. இதற்கான நிதியை கற்குடா தொகுதிபாராளுமன்ற உறுப்பினரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான திரு கே. டபிள்யூ. தேவநாயகம் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 80 ஆயிரம் ரூபா ஒதுக்கியுள்ளார். இவ்வேலைகளை கிராமசபை விசேட ஆணையாளரும், உதவி அரசாங்க அதிபருமான திரு. எம், மௌனகுருசாமி கவனித்து வருகிறார்.

## அடையாள அட்டை

(புலோலி)
பருத்தித்துறைத் தொகுதி அம்பன் கமநலச் சேவை நிலையப் பிரிவில் அடங்கிய கமத்தொழிற் காணிகளில் பயிர் செய்யும் விவசாயிகளுக்குப் புதிய அடையாள அட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகள் யாவரும் இம்மாதம் 12 ம் திகதிக்கும் 17ம் திகதிக்குமிடையில் தவறாது புகைப்படங்களுடன் சமூகம் கொடுத்து புதிய அடையாள அட்டைகளைப் பெற்றுச் செல்லவேண்டுமென பெரும்பாக உத்தியோகத்தர் திரு பீதாம்பரம் அறிவித்துள்ளார்.

## திருடர்கள் அட்டகாசம்!

(மன்னார்)
வீட்டினுள் புகுந்து திருட முயன்ற வெளியூரைச் சேர்ந்த திருடர்கள், திருட்டு முயற்சி தோல்வியடையவே வீட்டிலிருந்த பெண்மணியைக் கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டனர்.

இச்சம்பவம் மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள புதுக்குடியிருப்பு கிராமத்தில் நடைபெற்றது.

பெண்மணியைக் கத்தியால் குத்திவிட்டு ஓடிய திருடர்களை புதுக்குடியிருப்பு கிராம இளைஞர்கள் துரத்திப் பிடித்து மன்னார் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

கத்தியால் குத்தப்பட்டு படுகாயமடைந்த பெண்மணி மன்னார் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### பதிவுத் தபால்களை

## ஏற்கும் நேரத்தில் மாற்றம், பொதுமக்கள் அதிருப்தி!

(உடுப்பிட்டி)
கரவெட்டித் தபாற்கந்தோரில் முன்னர் மாலை 5 மணி வரையும் ஏற்கப்பட்டு வந்த பதிவுத்தபால்கள் இம்மாதம் முதல் மாலை 4 மணி வரையுமே ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நடவடிக்கைக்கு இப்பகுதிப் பொதுமக்கள் அதிருப்தியும், கண்டனமும் தெரிவித்துள்ளனர்.

முன்னர் மாலை 5 மணி வரையும் பதிவுத் தபால்கள் ஏற்கப்பட்டு வந்ததால் மிக முக்கியமானதபால்களை இறுதி நேரத்திலும் பதிவு செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன இதனால் இந்தப் பகுதிப் பொதுமக்களும் வர்த்தகர்களும், மாணவர்களும் பெரிதும் பயனடைந்து வந்தனர்.

பதிவுத்தபால்களை மீண்டும் மாலை 5 மணிவரை ஏற்க வேண்டுமென்று கோரி தபால் தந்தி அமைச்சருக்கு இப்பகுதி மக்கள் மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

## யாழ்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)
ரெனக் கருதப்படும் கே. வெங்கடேஸ்வரசர்மா யாழ். கோஷ்டியின் சிறந்த வேகப்பந்து வீச்சாளராவார். என். தனஞ்செயன் சிறந்த சுழல்பந்து வீச்சாளராக விளங்குவதுடன் இவ்வருடம் நடைபெற்ற போட்டிகளில் அதிக விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் சிறந்த விக்கெட் காப்பாளர் எஸ். சகாயராஜா இக்கல்லூரியின் சிறந்த துடுப்படிவீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சென்றவருடம் சென். பற்றிக்ஸ் கோஷ்டிக்கு தலைமைதாங்கிய இவர் குறுகிய நேரத்தில் ஓட்டங்களைப் பெறுவதில் திறமை மிக்கவர். எம். சி. சேரமான் எம். ஜே. மலேமான், மகான் துரைசிங்கம் போன்ற சிறந்த துடுப்படி வீரர்களும் சென். பற்றிக்ஸ் கோஷ்டியில் அங்கம் வகிக்கிறார்கள்.

ரி. அருள்தேவன், எம். ஜே மலேமான் ஆகியோர் சென் பற்றிக்ஸ் கல்லூரியில் ஏனைய பந்துவீச்சாளராக இருக்கிறார்கள்.

இவ்வருடம் விளையாடிய கிரிக்கெட்போட்டிகளில் யாழ்ப்பாணக்கல்லூரி, யாழ். மத்திய கல்லூரியிடம் மட்டுமே தோல்வியடைந்துள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி இவ்வருடம் விளையாடிய கிரிக்கெட்போட்டிகளில் யாழ். சென், ஜோன்ஸ் கல்லூரியினாலேயே தோற்கடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கல்லூரி, சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய இரு கோஷ்டிகளுமே இம்முறை பலம்வாய்ந்த கோஷ்டிகளாக விளங்குவதால், யாருக்கு வெற்றி கிடைக்குமென்பதை அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. எந்தக் கோஷ்டிக்கு வெற்றி கிடைக்குமென்பதை கிரிக்கெட் ரசிகர்கள் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவ்வாரம் நடைபெறும் இம் மாபெரும் கிரிக்கெட் மோதல்பற்றியே யாழ். கிரிக்கெட் ரசிகர்கள் பேசிக்கொள்வதை எங்கும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வட்டுக்கோட்டை 'பிக்னல்' மைதானத்தில் இம் மோதல் இன்றும் நாளையும் இடம் பெறுகிறது.

## ஆசிரியர்களுக்குப் பிரியாவிடை

(அடம்பன்)
அடம்பன் மகாவித்தியாலயத்திலிருந்து அண்மையில் வேறுஇடங்களுக்கு மாற்றலாகிச் சென்ற 10 ஆசிரியர்களுக்கு வித்தியாலய ஆசிரியர் கழகத்தினால் கழகத் தலைவர் திரு. க. பேரின்பதாசன் தலைமையில் பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது. (இ)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை மருந்துக்கலவையாளர் திரு. எஸ். சற்குணம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வட்டுக்கோட்டை அரசினர் மத்திய மருந்துச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு உருத்திரபுரம் அரசினர் வைத்தியசாலை மருந்துக்கலவையாளர் திரு. க. நடராசசிங்கம் இடமாற்றம் பெற்றுள்ளார். (அ)

## கயரோக சங்க வருடாந்தக்கூட்டம்

(புலோலி)
இலங்கை கயரோக தேசிய நிவாரண சங்க வடமராட்சிக் கிளையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் இம்மாதம் 30 ந்திகதி பருத்தித்துறை சித்திவிநாயகர் பாடசாலை மண்டபத்தில் கிளையின் தலைவர் திரு. ஆ. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

## மீன்பிடித் துறைமுகம்

(மட்டக்களப்பு)
பொத்துவில் தொகுதியில் அட்டாளச்சேனை என்னுமிடத்தில் 25 லட்சம் ரூபா செலவில் மீன்பிடித்துறைமுகம் ஒன்று அமையவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை பொத்துவில் முதல்வர் ஜனாப் எம். ஜலால்தீன் மேற்கொண்டுள்ளார்.

## பாலர்பாடசாலை

(மன்னார்)
தலைமன்னார் பியர் முஸ்லிம் மக்களால் 30 ஆயிரம் ரூபா செலவில் பாலர் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டு வருகிறது.

## தண்ணீர்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)
பற்றினால் நீர் குறைவாக முடியும். இத்திட்டத்தைத் தொடர்புக் கமக்காரர் மூலமாக நாம் பரப்பி வருகின்றோம். இதனைக் சகல விவசாயிகளும் அறிந்து பின்பற்ற வேண்டியது அவசியம்.''

நிலையச் செயலாளர் திரு. ச.ம தவராசா நன்றி கூறினார். (அ)


# சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.

## கடுகதி பஸ் சேவை - யாழ்ப்பாணம்

ஆரம்பம் - 17-3-1980

**ஆசனப் பதிவுகள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படும்**

**ஆசனப் பதிவு செய்யுமிடங்கள்:**

கொழும்பு (1) கொலட்ஸ் லிமிட்டெட்,
101, டி. எஸ். சேனநாயக்க மாவத்தை,
பொறளை, கொழும்பு—8.
தொலைபேசி; 96101 (5 லைன்)

(2) யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்,
154, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு—13.
தொலைபேசி: 35620

யாழ்ப்பாணம் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 370, 438, 537

**பயணக் கட்டணம்:**

கொழும்பு — யாழ்ப்பாணம் — (ஒரு வழி) — ரூபா 45/- ஒருவருக்கு
கொழும்பு — அனுராதபுரம் — (ஒரு வழி) — ரூபா 30/- ஒருவருக்கு

சி. எம். ரி. உல்லாச கடுகதி

# சிலோன் மோட்டர் ட்ரான்சிட் கொம்பனி (1955) லிமிடெட்.

(கொலட்ஸ் குழு அங்கத்தினர்)
101, டி. எஸ். சேனநாயக்க மாவத்தை, கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மூன்று நடிகர்களுடன் ஒரு சந்திப்பு

# ஈழத்துகலைஞர்திறமைகண்டு நெஞ்சு பூரிக்கிறது



ஒரே கல்லில் மூன்று கனிகள் என்பார்கள். அதுபோலத்தான் இந்தப் பேட்டியும்! தென்னிந்தியாவின் மூன்று பெரும் நடிகர்களை ஒரே கதிரையில் அமரவைத்து, கேள்விக்கணைகளைத் தொடுத்து, ஒரே கேள்விக்கு மூன்று பதில்களை வரவழைத்து இங்கு 'மாலை'யாகத் தருகின்றேன்; சுவைத்துப்பாருங்கள்.

''யாழ்ப்பாண ரசிகர்கள் எங்களை மன்னிக்கவேண்டும்'' - இந்தப் பீடிகையுடன் தான் பேட்டி ஆரம்பமானது.

''எங்களையும் உங்களையும் ஒரு இருபது மைல் கடல் தான் பிரித்திருக்கிறது, ஆனாலும் பாருங்களேன்... இத்தனை சிறிய தூரம், எந்தப் பெரிய இடைவெளியை ஏற்படுத்திவிட்டது என்று...''

— இப்படிக் கூறினர் மக்கள் கலைஞர் ஜெய்சங்கர்.

## நடிகர்கள் நாடளலாமா?

''என்னைக் காண, நாகத்துவதைக் கேட்டு வாய்விட்டுச் சிரிக்க, சும்மா சொல்லப்படாது... என்னைத் தொட்டுப் பார்த்து - நான் மனிதன் தானா என்று - திருப்திகொள்ள எத்தனை உள்ளங்கள் யாழ்ப்பாணத்தில்- இலங்கையின் தன்னிகரற்ற தமிழ்ப் பகுதியில் இருக்கிறார்கள் என்று நேரில் அறியும்போது... உண்மையிலே ஸார் கண்ணீர் வருகிறது. நான் ஒரு சின்ன மனுஷன் என்று எனக்குள்ளே நான் எண்ணிக்கொண்டிருக்கையில், எத்தனை பெரிய மனுஷனா என்னை யாழ் ரசிகர்கள் உயர்த்திவைத்திருக்கின்றார்கள்... இதனை நினைக்கும் போதே உடம்பு 'சில்' என்று புல்லரிக்குது ஸார்...'' - இது நாகேஷின் குரல்.

''தமிழன் எங்கு இருந்தாலும், அவன் உலகில் எந்த மூலையில் வாழ்ந்தாலும் அவர்கள் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள்தான்- சகோதரர்கள்! ஒருவனுக்கு இன்னல் வருவதை மற்றவன் பார்த்துக்கொண்டிருக்கமாட்டான். அதுதான் நமது மரபு...'' என்றார் அசோகன்.

''பக்கத்திலே ஒருநாடு இருக்கிறது. அங்கு நம்மவர்களும் இருக்கிறார்களே... ஒருதடவை சென்றுபார்த்தால் என்ன என்ற உணர்வு, உங்களுக்கு முன்னர் எப்பொழுதாவது ஏற்பட்டதா?-'' நான் கேட்டேன்.

''அந்த இன உணர்வு எங்களுக்கு இல்லை என்று முடிவு கட்டிவிடாதீர்கள். சந்தர்ப்பங்கள் எங்களுக்கும் சாதகமாக அமையவில்லை...''- இப்படி ஜெய்சங்கர் கூற, நாகேஷ் குறுக்கிட்டு-

''இத்தனையோ பேர் கொழும்போட திரும்பிவிடுகிறார்களே...! இதுக்கு என்ன ஸார் சொல்லப்போறீங்க...'' என்று கேட்டுவிட்டு; யாழ்ப்பாண மக்களை நாங்கள் அவசியம் பார்க்கவேண்டும் என்று எங்கள் படத்தயாரிப்பாளர்களை வற்புறுத்தி யாழ்ப்பாணம் சென்றிருந்தோம்.'' என்று விளக்கினார் நாகேஷ்.

திடீரென்று நான் கேட்டேன்-

''நடிகர்கள் நாடாளலாமா?''

''முழு உலகத்திலேயே எங்கும் நடக்காதமாதிரி தமிழ் நாட்டில் ஆட்சி நடைபெற்றிருக்கிறதே'' என்று நாகேஷ் கூற;

''அதன் 'பலாபலனை'யும் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றார் ஜெய்சங்கர், சற்றுக் கிண்டலாக!

இதனைப் பார்த்துக்கொண்டிருந்த அசோகன், ''அண்ணாவின் பெயரைச் சொல்லி மக்களின் ஆதரவைப்பெற்றவர்கள் அண்ணா கூறிய வழியில்செல்லவில்லை; அனுபவிக்கின்றார்கள்'' என்று கூறி அண்ணாவை நினைவுபடுத்தினர்.

''ஈழத்தமிழர்களைப் பற்றி குறிப்பாக என்ன நினைக்கிறீர்கள்?''

''தென்னகத் தமிழர்களை மிஞ்சிவிட்டார்கள்! மொழிப்பற்றும், இனப்பற்றும், உயர்ந்த பண்பாடும், விருந்தோம்பலும் கொண்டவர்கள் ஈழத் தமிழர்கள் என்பதைக் கண்டு குளிரக் கண்டு உள்ளம் பூரித்தது...'' என்றார் நாகேஷ்.

''திறமையான கலைஞர்கள் இங்கு இருக்கின்றார்கள் என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைந்தோம் என்றார் ஜெய்சங்கர்.

''நீங்கள் நேரில் கண்ட இலங்கை கலைஞர் ஒருவரைப் பற்றிக் கூறுவீர்களா?''- நான் கேட்டேன்.

ஜெய்சங்கர் கூறினர்:''நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களைச் சந்தித்தது ஒரு மறக்கமுடியாத சம்பவம். அவருக்கு நான் பொன்னாடை போர்த்தியது, என்றும் நினைவில் பசுமையாக இருக்கும். இந்த ஏற்பாட்டைச் செய்த ''இரத்தத்தின் இரத்தமே'' படத்தின் தயாரிப்பாளர்களில் ஒருவரான திரு. கே. ஜெயபாலசிங்கம் அவர்களை நான் பாராட்டுகின்றேன். நடிகமணியைச் சந்தித்தபோது, அவர் எத்தன்மையான பெருங்கலைஞர் என்பதை என்னால் உணரமுடிந்தது. இது மட்டுமல்ல இவர் போன்ற பல திறமையான கலைஞர்கள், நடிகர்கள் ஈழத்தில் இருந்தும் அவர்களைச் சரியாக ஈழத்து சினிமா பயன்படுத்தவில்லையே என்று எண்ணும்பொழுது மிகவும் வருத்தமாக இருக்கிறது'' என்று கவலைப்பட்டார் ஜெய்சங்கர்.

''நீங்கள் இப்பொழுதுதான் அறிகிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள் ஆனால் ஏற்கனவே நிறையத் தெரிந்துகொண்டவர்கள் தமிழ்நாட்டில் இருந்தும், ஈழத்து நடிகர்களுக்கு தமிழ்ப் படங்களில்இடமளிக்க முன்வரவில்லையே!'' என்று நான் கூறியபோது;

''சிலர் வேண்டுமென்றே விடும் தவறுக்கு நாமும் பொறுப்பாகி விடமுடியுமா?'' என்று அசோகன் கூறவே ஜெய்சங்கர் குறிக்கிட்டு—

''நாங்கள் முன்னர் சற்றுத் தூரமாக நின்றோம். இப்பொழுது நெருக்கமாக வந்துவிட்டோம். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டோம். இனிமேல் எந்தச்சக்தியும் எங்களைப் பிரித்துவிட முடியாது. இந்த அடிப்படையிலேயே நாம் செயல்படுவோம்'' என்று சற்றுக் 'கார'மாகவே கூறினர்.

இதனை மிகவும் அவதானமாகக் கவனித்துக் கொண்டிருந்த நாகேஷ்-

'நாங்கள் மட்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருக்காவிட்டால், தமிழன்னைக்கு பெரியதொரு தவறுசெய்துவிட்டவர்களாகி இருப்போம்! அதே நேரத்தில் நாம் யாழ்ப்பாண ரசிகர்களிடம் மன்னிப்புக்கேட்டுக்கொள்கின்றோம். அது எதற்காகத் தெரியுமா? இத்தனை காலமும் அக்கரையிலிருந்த நாங்கள் இக்கரைக்கு வந்து உங்களை எட்டிப் பார்க்காததற்குத்தான்! இனிமேல் நிலைமை மாறிவிடும். ஆரோக்கியமான ஒரு நல்லுறவை எதிர்காலத்தில் ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கலாம்'' என்று கூறினர்.

— மகான் —

''ஈழத்து நாடகம் எதனையும் பார்த்திருக்கிறீர்களா?''

''கொழும்பில் ஒரு நாடகப் பார்த்தோம். மிகவும் ரசித்தோம்! நடிகர்களின் ஆற்றல் கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தோம்'' என்றார் அசோகன். கூடவே ஜெய்சங்கரும் 'ஆமா' என்றார்.

''எதிர் காலத்திலாவது ஈழத்து நாடகங்கள், திரைப் படங்கள் தமிழகத்தில் இடம் பெற முயற்சிப்பீர்களா?''

'நிச்சயமாக! ஏன்; நாங்கள் நடித்துள்ள ''இரத்தத்தின் இரத்தமே''படம் அருமையாக அமையப்போகிறது. 'ஏஜென்'ஸியை எடுத்திருக்கின்றார்கள். ஒரே நேரத்தில் இலங்கையிலும்- தமிழ்நாட்டிலும் திரையிட நடவடிக்கைகள் எடுத்தால் நிச்சயம் பெருவெற்றி கிடைக்கும். அதில் சந்தேகப் படவே தேவையில்லை'' என்றார் ஜெய்சங்கர்.

''ஈழத் தமிழருக்கு இன்னல் நேர்ந்தால்...'' இதனை நான் முடிப்பதற்குள்ளாகவே நாகேஷ் குறிக்கிட்டு ''தமிழ் நாட்டில் குரல் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்திலும் குரல் கொடுப்போம்'' என்று சற்று ஆக்ரோஷமாகக் கூறினர். ஜெய் அவரைப் பார்த்து...

''தமிழக அரசியல் எப்படி இருக்கிறது? நீங்கள் கலைஞர் பக்கம் தானே?'' என்று ஜெய்சங்கரிடம் கேட்டேன்.

''தமிழக அரசியல் சூடு பிடித்திருக்கிறது. மக்கள் யார் பக்கம் நிற்கிறார்கள் என்பது சில வாரங்களில் தெரிந்துவிடும். தவிர, நாம் வெறும் நடிகர்கள், நாடாளும் ஆசை எனக்கு இல்லை. நான் கலைஞர் பக்கம் நிற்பதாக மக்கள் கூறுகிறார்கள். காரணம் அவர் படங்களில் நான் கூடுதலாக நடிப்பதனால் இருக்கலாம். மேலும் நான் கலைஞன்...—'' என்று சமாளித்துக்கொண்டார்.

நான் பேட்டியை முடித்துக் கொள்ள முயன்றபோது நடிகர்கள் மூவருமே ஈழத்தமிழர் பற்றி மிகவும் அக்கறைகொண்டதாகத் தெரிவித்து ''நாங்கள் நடிகர்களாக இருந்தாலும் எங்கள் குரல் ஒலிக்கும்'' என்று கூறினர்.

''நாம் தமிழர். மொழியால் ஒன்றுபட்டவர்கள். இன்னல் வரும்போது பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்'' என்று அழுத்தமாக குரல்கொடுத்து, நன்றிதெரிவித்துக் கொண்டனர் மூன்று நடிகர்களும்.

இப்பேட்டியை எனக்கு ஒழுங்கு செய்திருந்தவர் பட தயாரிப்பாளர் கே. ஜெயபாலசிங்கம். இதற்கு உதவியாகவிருந்தவர் நண்பர் த. இராசலிங்கம். இவர்களுக்கு நன்றி.

---

# நஸீர் மீண்டும் நாளை வேகநடையை ஆரம்பிக்கிறார்

(யாழ்ப்பாணம்)

'டுவிஸ்ட்' வீரர் ஜனுப் பரீத் நசீர் வேகநடையில் உலக சாதனையை நிலைநாட்டும்புதிய முயற்சியை மீண்டும் சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவிருக்கிறார்.

யாழ். முஸ்லிம் வட்டாரப் பகுதியில் இந்த வேகநடை முயற்சி மேற்கொள்ளப்படவிருக்கிறது.

டாக்டர் பிலிப் நாளைமாலை வேகநடைமுயற்சியை ஆரம்பித்துவைப்பார்.

யாழ். சுப்பிரமணியம்பூங்காவைச்சுற்றி இருவாரங்களுக்கு முன்னர் ஜனுப் நசீர் வேகநடைமுயற்சியை ஆரம்பித்து முதல்நாள் இரவே இனந்தெரியாத இரு இளைஞர்களால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து வேகநடை முயற்சியை இடையில் நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

மீண்டும் அவர் வேகநடை முயற்சியை நாளை ஆரம்பிப்பார். (க)

---

அகில இலங்கை விளையாட்டு விழா

# வடபகுதிக்கு ரூ. 28 ஆயிரம் உதவி

மன்னார்

வடபகுதியில் உள்ள 28 உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளுக்கும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த தலா 1000 ரூபாவீதம் விளையாட்டமைச்சு வழங்கவிருப்பதாக விளையாட்டுப்பணிப்பாளர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திற்கு 4000 ரூபாவும், வவனியா மாவட்டத்திற்கு 4000 ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 4000 ரூபாவும் யாழ் மாவட்டத்திற்கு 16,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு அமைச்சு அகில இலங்கை ரீதியில் நடத்தவிருக்கும் இவ்விளையாட்டுவிழா ஆகஸ்ட் மாதம் நடைபெறுமென விளையாட்டுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

---

யாழ். கங்கா சத்திரம்:

# இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கங்காசத்திரப் பிரச்னைபற்றி இன்னும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லையெனத் தெரியவருகிறது.

இச்சத்திரத்தை யாழ் மாநகர சபையினர் இடிக்க முற்பட்டதைத் தொடர்ந்து ஆட்சேபித்து இக்கட்டிடத்தைப் பாதுகாக்க வேண்டும் என சிலர் தொல்பொருள் ஆணையாளருக்கு அறிவித்ததினால் கட்டிடம் இடிக்கும் வேலைஇடை நிறுத்தப்பட்டது.

யாழ். தொல்பொருள் பிரதேச அதிகாரி திரு. ம. பொ. செல்வரத்தினம், சத்திரம் பற்றிய பூர்வாங்க அறிக்கையொன்றை தொல்பொருள் ஆணையாளருக்குஅனுப்பியிருந்தார்.

தொல்பொருள் ஆணையாளர் டாக்டர் எஸ் கருணாரத்தின, இவ்விடயத்தை கட்டிட நிபுணரும் பிரதி ஆணையாளருமான திரு. நெபின் சில்வாவிடம் ஒப்படைத்திருந்தார்.

கட்டிட நிபுணரான திரு. நெபின் சில்வா, சத்திரத்தை நேரில் வந்து பார்வையிட ஏற்பாடாகியது. அவர் இன்னும் இங்கு வந்து சத்திரத்தைப் பார்வையிடாததினால், இதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை. (க)

---

# வனகுறவருக்கு வீடமைப்புத்திட்டம்

(மட்டக்களப்பு)

பொத்துவில் தொகுதியில் நீண்டகாலமாக வாழ்ந்துவரும் வனகுறவர்களின் வீடில்லாப் பிரச்சினையைதீர்க்கும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்ட அமைச்சரும் பொத்துவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எம். கனகரட்னம் எடுத்த முயற்சியின் காரணமாக அறுகம்பை என்னும் இடத்தில் 150 வீடுகள்கொண்ட சுயவீடமைப்புத் திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1967 யுத்தத்தில் கைப்பற்றிய

# அரபுமண்ணில் யூத மக்களைக் குடியேற்ற இஸ்ரேல் முயற்சி

## அமெரிக்கா, வால்ட்ஹெய்ம் கண்டனம்

ஜெரூஸலம், மார்ச், 13 இஸ்ரேலில ஜெரூஸலத்துக்கு அருகிலுள்ள அரபு மக்கள் குடியிருப்புப் பிரதேசத்தில் யூத மக்களை குடியேற்ற இஸ்ரேலிய அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச் செயலாளர் டாக்டர் குர்த் வால்ட் ஹெய்முர், அமெரிக்காவும் கண்டித்துள்ளனர்.

இஸ்ரேலிய அரசின் இந்த நடவடிக்கை மத்திய கிழக்கின் அமைதிக்குப் பெரும் பங்கம் விளைவிக்கும் என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சு அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

1967 அரபு - இஸ்ரேலிய யுத்தத்தில் இஸ்ரேல் கைப்பற்றிய அரபுமண்ணிலுள்ள அரபுக் குடியிருப்புக்களிலேயே இஸ்ரேலிய அரசு யூதர்களைக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்து வருகிறது. (இ)

30 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியே

# இன்றைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்

## சரண்சிங் சாடுகிறார்

புதுடில்லி, மார்ச், 13 "இந்தியாவின் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு 30 ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியே காரணம். ஜனதா கட்சியினதும் லோக்தள் கட்சியினதும் ஆட்சியேஇன்றைய பொருளாதார நெருக்கடிக்குக்காரணமென்று கூறுவது அப்பட்டமான பொய்".

இவ்வாறு லோக்தள் தலைவர் திரு. சரண்சிங் நேற்று லோகசபையில் பேசுகையில் கூறினார்.

திருமதி இந்திராகாந்தி அரசின் இடைக்கால வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது;-

இந்திரா அரசு தனது திட்டங்களையும், கொள்கைகளையும் மறுபரிசிலனை செய்து கிராம அபிவிருத்தியையும், விவசாயப் பெருக்கத்தையும் கருத்திற்கொண்டு பல புதிய திட்டங்களை வகுக்கவேண்டும்.

கடந்தகாலஅரசுகளைக்குறை கூறுவதை விடுத்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஜனதா கட்சியும் லோக்தள் கட்சியும் சரியான பொருளாதாரக் கொள்கைகளையே கடைப்பிடித்து வந்தன. இதை எவரும் மறுக்க முடியாது. (இ)

சட்டசபைத் தேர்தலின் பின்

## வரிச்சுமைகளை ஏற்க மக்கள் தயாராக வேண்டும்

### ராஜேஸ்வரராவ் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச், 13 கலைக்கப்பட்ட ஒன்பது மாநிலங்களிலும் நடைபெற இருக்கும் சட்டசபைத் தேர்தலில் இந்திரா கர்ங்கிரஸ் வெற்றி வாய்ப்புக்களை இழந்துவிடும் என்ற அச்சம் காரணமாகவே இடைக்கால 'பட்ஜட்'டில் புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படவில்லை.

இவ்வாறு இந்தியக் கம்யூனிட் கட்சிப் பொதுச்செயலாளர்திரு. ராஜேஸ்வரராவ்தெரிவித்துள்ளார்.

மாநில சட்டசபைத் தேர்தல் முடிவுற்ற பின்னர் வரிச்சுமைகளை ஏற்க மக்கள் தயாராக இருக்கவேண்டும் என்றும் அவர் கூறினார். (இ)

## 1 கோடி ரூபா நாளாந்தம் வரட்சிப்பணி!

புதுடில்லி, மார்ச் 13 இந்திய வரலாற்றில் என்றுமில்லாதவாறு மத்தியப்பிரதேசத்தில் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளது,

இம் மாநிலத்தில் வாழும் மக்கள் தொகையில் 50 வீதத்திற்கும் அதிகமானோர் வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்,

27 லட்சத்து 38 ஆயிரம் பேருக்கு நாளாந்தம் ஒரு கோடி ரூபா செலவில் வரட்சிநிவாரணம் அளிக்கப்பட்டுவருகிறது. (இ)

கொலம்பிய பணய நாடகம்

## 5 கோடி டாலர் நிபந்தனை 1 கோடியாகக் குறைப்பு

பொகொடா, மார்ச், 13 கொலம்பியாவிலுள்ள டொமினிக்கன் தூதரகத்தில் 32 பேரைப் பணயம் வைத்துள்ள கொரில்லாக்கள் தமது நிபந்தனையைக் குறைத்துள்ளனர்.

5 கோடி டாலர் பணம் தர வேண்டும் என்றும் சகபாடிகளான 311 அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும்ஏற்கனவே நிபந்தனை விதித்த இ-துசாரி கொரில்லாக்கள், இப்போது தமது நிபந்தனைப் பணத்தை 1கோடி டாலராகவும், கைதிகள் தொகை 70ஆகவும் குறைத்துள்ளனர்.

இதேவேளை இவ் விவகாரம் குறித்து கொலம்பிய அரசின் வெளிநாட ... ல்கள் அமைச்சு அதிகாரிகளுக்கும் கொரில்லாத்தலைவருக்கு ... மிடை ... யே ... தூத ... கத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ... வாகன ... ல் தொடர்பு ... சேர்ந்து ... கள் நடைபெறுகின்றன. (இ)

## இந்திராவுடன் இளையபெருமாள் குழு பேச்சு

புதுடில்லி, மார்ச் 13 நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலுக்கான தி மு க- இந்திரா காங்கிரஸ் தொகுதி ஒதுக்கீடு குறித்து தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தூதுக்குழு பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தியுடன் பேச்சு நடத்தியது.

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. இளையபெருமாள தலைமையில் சென்ற குழுவே திருமதி காந்தியுடன் பேச்சு நடத்தியது. (இ)

## புதுச்சேரியில் வைகுந்தவாசன்

[புதுச்சேரி]

லண்டன் தமிழர் ஒருங்கிணைப்புத் தலைவர் திரு. வைகுந்தவாசனுக்கு புதுச்சேரியில் திரு. டி சேதுராமனார் இல்லத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

திருவாட்டி பவானி மதுரகவி தலைமையில் நடைபெற்ற பாராட்டுவிழாவிற்கு திரு மு. வேந்தன் வரவேற்புரை வழங்கினார். சென்னை 'மர்மம்' இதழாசிரியர் திரு. அருகோபாலன் பாராட்டுரை வழங்கினார். புதுச்சேரி அரவிந்தர் ஆச்சிரமம், பாரதி நினைவு இல்லம், பிரதிதாசன் நினைவுஇல்லம் ஆகியவற்றிற்கும் திரு. வைகுந்தவாசன் விஜயம் செய்தார்.

## நடன நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக கலாச்சார மன்றம் நடாத்தும் நடனவிருந்து நாளை சனிக்கிழமை மாலை யாழ், வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சொக்குவில் கலாபவன மாணவிகளும், செல்வி கிரிஜா சண்முகசுந்தரம் ஆகியோரும் இந்நிகழ்ச்சியின்போது நடன விருந்தளிக்கவுள்ளனர். (கொ)

## பட்வாரியை பதவி விலக மேலும் கோரிக்கை

சென்னை, மார்ச், 13 தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரியைப் பதவி விலக்க வேண்டும் என்று தமிழ்நாடு சஞ்சய் காந்தி மன்றம் மத்திய அரசைக்கேட்டுள்ளது.

இந்திரா காங்கிரஸ் கட்சிபதவி வகிக்காத மாநில அரசுகளை கலைத்தமையையும் சஞ்சய் காந்தி மன்றம் வரவேற்றுள்ளது. (இ)

......

## மேலும் நால்வர் தி. மு. க.வில் சேர்ந்தனர்

மதுரை, மார்ச், 13 மதுரை மாநகராட்சி மன்ற அண்ணா தி. மு. க. உறுப்பினர்கள் மூவரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஒருவரும் தத்தம் கட்சிகளிலிருந்து வெளியேறி தி. மு. க. வில் சேர்ந்தனர்.

அ. தி. மு. க.வைச் சேர்ந்த திரு. டி.கிருஷ்ணன், திரு.எம் கிருஷ்ணன் திரு. ராஜாங்கம், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. சுந்தரராஜன் ஆகிய நால்வருமே தி. மு. க. வில் சேர்ந்தனர். (இ)


......

## பாக். நல்லுறவை அமெரிக்கா விரும்புகிறது

வாஷிங்டன், மார்ச் 13 அமெரிக்க 40 கோடி டாலர் இராணுவ, பொருளாதார உதவிகளை பாகிஸ்தான் ஏற்க மறுத்தாலும் பாகிஸ்தானுடன் நட்புறவை மேலும் விஸ்தரிக்கவே அமெரிக்கா விரும்புகிறது.

இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ)



புதிய ஹேஸ்ப்ரே வகைகள்



ஏர்ஜென்ட்
தோளில் ஏந்தும்
சிவிறி/தூவி
மின்சக்தியில் இயங்குவது.
பாரமற்றது. சீரான சமநிலை.
ஜேர்மனி, ஜேஎல்ஓ கம்பனி
தயாரித்த இயந்திரம். 28 அடி
தூரம் வரை சிறப்பாக
தெளிக்கலாம்.



ஹேஸ்ப்ரே 300 PT
இரட்டைப் பீச்சு முனை
கொள்ளளவு 3 கலன் இடது
கையால் அல்லது வலது கையால்
சுலபமாக இயக்கலாம்.



ஹேஸ்ப்ரே 300 PB
தாங்கிக்கு வெளியே இணைக்கப்பட்ட
சிரக்கத்தக்க பம்புச் சாதனம்,
இரட்டைப் பீச்சு முனை.
கொள்ளளவு 3 கலன் இடது
கை இயக்கம்

Melville Assouw Designs

உற்பத்தியாளர்கள்:
அக்ரோ டெக்னிகா லிமிட்டெட்.
விநியோகத்தர்கள்:
ஹேலீஸ் லிமிட்டெட்,
25, போஸ்டர் லேன், கொழும்பு 10

சிபார்சு செய்யப்பட்ட சில்லறை விலைகள்

| | |
|---|---|
| "ஏர்ஜென்ட்" மிஸ்ட்புளவர் ஜேர்மன் JLO என்ஜினுடன் | ரூ. 4,600/ |
| ஹேஸ்ப்ரே 300 PT பித்தளை | ரூ. 1,150/- |
| ஹேஸ்ப்ரே 300 PT பைபர் கிளாஸ் | ரூ. 1,215/- |
| ஹேஸ்ப்ரே 225 PB பித்தளை | ரூ. 950/- |
| ஹேஸ்ப்ரே 225 PB பைபர் கிளாஸ் | ரூ. 895/- |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஹரன்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
**பேசும்தெய்வம்**
(புத்தம் புதிய பிரதி)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-ஜமுனா
**பொம்மைக் கல்யாணம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
**சஞ்சீர்** (ஹிந்தி) **SANJEER**
ஸ்டோ (யாழ் நகர்) Daily 10-30, 2-15, 4-45, 7-15 & 9-30 போன்: 7698
**ARABIAN ADVENTURE**
(Color)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோகன்
கவிதா நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன்ட் கலர்)

**ராணி** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows—10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
ANTHONY QUINN in
**THE DON IS DEAD**
(Adults Only)
(திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்)
From 15-3-80 **That Man Bolt**
(Karate Film)

**REGAL** JAFFNA. TODAY ONLY Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
DEAN JONES in
**MR. INVISIBLE**
COLOR

**வின்ஸர்** 3வது ஜனத்திரள் வாரம்! (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப, 3-30, 6-15, இரவு 9
நாகேஷ்-முத்துராமன் சௌகார் ஜானகி
**"எதிர் நீச்சல்"** (புதிய பிரதி)
குறிப்பிட்ட தினங்கள் மட்டும்

**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் — ஜெய்சித்ரா — ஸ்ரீகாந்த்
**இன்ஸ்பெக்டர் மனைவி**


**SANTHI** JAFFNA Phone: 7642
Daily 5 Shows
TODAY ONLY
TERENCE HILL...BUD SPENCER — in
**WATCH OUT WE'RE MAD!**
Color — Action — Comedy
முழுக்குடும்பமும் பார்த்து மகிழ வேண்டிய குலுங்கக் குலுங்கச் சிரிக்கவைக்கும் சிரிய சித்திரம்.
SPECIAL SCHOOLS SHOWS Contact Manager




யாழ்ப்பாணக் கல்லூரி

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) சே. முரளீதரன், ரி. மதிராஜ், எஸ். சிவகுமார் (காப்டன்), பி. ஆனந்தகுமார் (உதவிக் காப்டன்), பி. முத்துலிங்கம், என். சங்ரசே.

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) ரி. நிதிராஜ், ஜி. ஜே. குணசங்கர், கே. ஞானசுப்பிரமணியம், கே. வெங்கடேஸ்வரன், எம். பதுமநிதி, பி. கணேசன், என். தனஞ்செயன்.



சென். பற்றிக்ஸ் கல்லூரி

இருப்பவர்கள் (இடமிருந்து வலம்) எஸ். சகாயராஜா, எம். எஸ். அல்பிரட், எம் கே. எம். ஜே. செல்லப்பா, பீ. ஏ. ரவிராஜ் [காப்டன்], எம். ஜே. மலேமான் [உதவிக் காப்டன்], எம். சேரமான், ஈ. ஆர். ரி. அருள்தேவன், ஈ. எம். துரைசிங்கம்.

நிற்பவர்கள் [இடமிருந்து வலம்] பி. சி. ஆர். ஜோசப், ரி. டி. ராஜசூரியர், ஜே. ஈ. ரிபூஸியஸ், எஸ். என். பற்றிக், எஸ். எஸ். ரவீந்திரன், பீ. ஜி. எஸ். பெனடிக்ற், வி. சதாஜனன், எல். ஐ. எஸ். குணரத்தினம், சி. அலெக்சாண்டர்.

மாபெரும் கிரிக்கட் போட்டி

# யாழ்.கல்லூரி-சென்பற்றிக்ஸ் 63-வது வருடாந்த மோதல்!

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெறும் 63வது வருடாந்த மாபெரும் கிரிக்கெட் மோதல் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது.

சகலதுறைகளிலும் சிறந்த ஆட்டக்காரராக விளங்கும் எஸ். சிவகுமார் யாழ். கல்லூரிக்கோஷ்டிக்குத் தலைமை தாங்குகிறார். கிரிக்கெட் விளையாட்டில் பலவருடகால அனுபவத்தையுடைய சிவகுமார் சிறந்த வேகப் பந்துவீச்சாளராகவும் விளங்குகிறார்.

கிரிக்கெட் துறையில் நான்கு வருட அனுபவத்தையுடைய பி. ஏ. ரவிராஜ் யாழ். சென் பற்றிக்ஸ் கோஷ்டிக்குத் தலைமைவகிக்கிறார். இவர் ஒரு சுழல்பந்து வீச்சாளருமாவார்.

யாழ். கல்லூரிக் கோஷ்டியின் இடதுகை வேகப் பந்துவீச்சாளர் சு. முரளீதரனின் பந்துவீச்சுத் திறமையிலேயே யாழ். கல்லூரியின் வெற்றி தங்கியுள்ளது. அதேநேரத்தில் சென்பற்றிக்ஸ் கல்லூரியின் வெற்றி அக்கோஷ்டியின் அதிவேகப் பந்துவீச்சாளர்

## வெற்றி

சுரேஷ் அல்பிரட்டின் பந்துவீச்சுத்திறமையிலேயே தங்கியுள்ளதென்று கூறலாம். யாழ். நகரிலேயே சிறந்த அதிவேகப் பந்துவீச்சாளராகத் திகழும் சுரேஷ் அல்பிரட் 6 அடிக்கு மேற்பட்ட உயரத்தைக் கொண்டவரென்பதனால் 'ஜிராவிரெக்' என அவரது கிரிக்கெட் விசிறிகளால் அழைக்கப்படுகின்றார். இவருக்குஈடு கொடுத்து யாழ்கல்லூரிவேகப் பந்துவீச்சாளர் முரளீதரனும் பலமுறை அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றுவாரெனக் கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

யாழ். கல்லூரியின் சிறந்த துடுப்படிவீரராகக் கருதப்படும் பி. ஆனந்தகுமார் இப்போட்டியில் அதிக ஓட்டங்களைப்பெற்று இக்கல்லூரியின் வெற்றிக்கு வழிஅமைத்துக் கொடுப்பாரென்றும் யாழ். கல்லூரி மாணவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பந்தைத் தடுத்து நிறுத்துவதில் ஒரு புலி என்றும் இவர் அழைக்கப்படுகிறார்.

யாழ். கல்லூரிக் கோஷ்டியின் "மின்னடி" வீரன் எம். பதுமநிதி குறுகியநேரத்தில் அதிகளவு ஓட்டங்களைப் பெறுவதில் திறமை வாய்ந்தவர். எல். டி. ஸ்டீபன்ஸ் கிரிக்கெட் துறையில் பலவருட அனுபவத்தைக்கொண்ட முன்னணி வீரராக யாழ். கோஷ்டியில் இடம்பெறுகின்றார், யாழ். கோஷ்டியில் உயரமானவ

(4ம் பக்கம் பார்க்க)


**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
விஜயகுமார்-ஜெயசித்ரா
நடித்த
**இந்திரா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dilka Watch Works
SPECIALIST IN WATCHREPARING
யாழ் நகரில் சகலவித மணிக்கூடுகளையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள...

டில்கா வாச்வேக்ஸ்
- பஸ் நிலைய எதிர் மேல்மாடி -
404/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு (50 சதம்)
The EELANAADU

## விவேகானந்தர் திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்) திரைப்படக்காட்சி இன்று கொக்குவில் ஸ்ரீஇராம வெள்ளிக்கிழமை மாலை யாழ். இருஷ்ண சேவாச்சிரமத்தால் வீரசிங்கம் மண்டபத்தில் சுவாமி விவேகானந்தரின் காண்பிக்கப்படவுள்ளது. (கொ)

கையிருப்பு முடிந்துவிட்டது.
சில தினங்களில்
புதிய 'ஸ்ரொக் கிடைக்கும்.
இன்றே பதிவுசெய்யுங்கள்.
FALCON SCOOTERS
பல்கன் ஏஜென்ஸி
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

### சீனி, மா விலை அதிகரிப்பு:

## சிறிய தேநீர் கடைகளுக்கு மூடுவிழா நடக்கிறது!

(யாழ்ப்பாணம்)
சீனி, மா விலை அதிகரித்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் சிறிய தேநீர்க் கடை வைத்திருப்போரில் பலர், கடைகளை மூடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்!

வழக்கமாகக் காலை 10 மணிக்கு முன்னரே விற்பனையாகும் பலகாரங்கள, இரவுவரை விற்பனையாகாமல் இருப்பதுடன், சில கடைகளில் மிஞ்சி விடுவதாகவும், தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரில் கடை உரிமையாளர் ஒருவர், தேநீர்க்கடைக்குப் பதிலாக பலசரக்குக் கடையொன்றை அதே இடத்தில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்துவருகின்றார். சில கடைக்காரர்கள் தேநீர்க் கடைகளை மூடிவிட்டு, விவசாயத்தில் ஈடுபட முன்வந்துள்ளனர். சிலர் வேறு தொழில்களை நாடிச் சென்றுள்ளனர்.

கடையப்பம் சுட்டு, கடைக்கு கொடுத்து சீவியம் நடத்திவந்த பெண்களும், இத்தொழிலை விட்டுவிட முன்வந்துள்ளனர். கடைகளில் முன்போல் பலகாரங்கள் விற்பனையாகாததே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

தேநீர் விற்பனைகூட, பாதியளவு குறைந்துவிட்டதாகவும், நகரத்திற்கு வருபவர்களில் அநேகர் கடைக்குவந்து வெறுந் தண்ணீர் மட்டும் குடித்துவிட்டுச் செல்வதாகக் கடைக்காரர் ஒருவர் தெரிவித்தார். (க)

## திரு. யோகேந்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
கப்பட்ட உத்தரவை தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கும்படி கோரப்பட்டிருந்தது.

1980 பெப்ரவரி 8-ம்திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னிலையில் இந்த விஷயம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது மனுதாரின் வழக்கறிஞரான திரு. வி. எஸ். ஏ புள்ளைநாயகம் எழுந்து, பதிமுதல்செய்யப்பட்ட பத்திரிகைகளை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திருப்பித் தருவாரேயானால் மனுவை வாபஸ்செய்துகொள்ள மனுதார் விரும்புவதாகத் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கையை ஆலோசிப்பதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அவகாசம் கோரியதைத் தொடர்ந்து நீதிமன்றம் பின்வரும் உத்தரவைப் பிறப்பித்துள்ளது;

"யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரிடமிருந்து அரசதரப்பு வழக்கறிஞர் பணிப்புரை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக 22-02-1980-ந் திகதி இவ் விஷயம் விசாரணைக்கு அழைக்கப்படும்"

நிலைமை இவ்வாறு இருக்க குறித்த 'ஈழநாடு' வாரமலரில் இது தொடர்பான செய்தி தவறான கருத்தை ஏற்படுத்தும் வகையில் பிரசுரிக்கப்பட்டமைக்காகவும் இதனால் யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கும் இதனுடன் சம்பந்தப்பட்ட ஏனையோருக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய சிரமங்களுக்காகவும் வருத்தம் தெரிவிக்கின்றோம். (ஆசிரியர்)

## இலங்கையின்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]
காளி) சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. வி. எஸ். ஏ. புள்ளேநாயகமும், திரு. தியாகலிங்கம் சியூ. ஸி.யின் வாதத்தை ஆதரித்து வாதிடுகையில் வடக்கு, கிழக்கில் நீதிமன்ற மொழி தமிழே. ஏனைய பகுதிகளில் நீதிமன்ற மொழி சிங்களம். ஆனால் இந்த எல்லா நீதிமன்றங்களிலும் தமிழில் மனுக்களைத் தாக்கல்செய்யலாம் என்று கூறினர்.

### உயர் நீதிமன்ற நீதியரசர்கள்

மேற்படி மேன்முறையீட்டை விசாரணைசெய்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் திரு. ஜி. ரி. சமரவிக்கிரம, திரு. வி. ரி. தாமோதரம், திரு. எஸ். சர்வானந்தா ஆகியோர் இலங்கையின் எந்தப்பகுதியிலும் உள்ள எந்த நீதிமன்றத்திலும் தமிழில் மனுவைத் தாக்கல் செய்யலாம் என்றும், மொழிபெயர்ப்புத் தேவை ஏற்படும்போது, அதற்கான செலவை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவித்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தமிழில் த்தாக்கல் செய்யப்பட்ட மனுவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது.

### வர்த்தமானி அறிவிப்பு

1971 ம் ஆண்டு மே மாதம் 7 ம் திகதி, நீதிமன்ற மொழி தொடர்பாக நீதி அமைச்சரினால் வர்த்தமானியில் விடுக்கப்பட்ட அறிவித்தல் அவருடைய அதிகாரத்துக்கு அப்பாற்பட்டது என்றும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று தீர்ப்பு வழங்கினர்.

அரசு தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. கே. எம். எம். பீ. குலதிலக ஆஜரானார். [ம]

## அம்பாறை கச்சேரி விஸ்தரிப்பு

(மட்டக்களப்பு)
அம்பாறை கச்சேரியை விஸ்தரிப்பதற்கான நிதியை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐந்து எம். பி.க்களும் தலா பத்தாயிரம் ரூபா மூலம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கியுள்ளனர். இதன்பிரகாரம் 50 ஆயிரம் ரூபாய் நிதி இதற்காக செலவிடப்படும்.

## தமிழகத்தில் எம் ஜிஆர்ஆட்சி நெடுஞ்செழியன் ஆரூடம்

திருச்சி, மார்ச் 13
தமிழகத்தில் எம். ஜி ஆர். தலைமையில் அ. தி. மு. தனித்து ஆட்சி அமைக்கும் என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. நெடுஞ்செழியன் திருச்சியில் நிருபர்கள் மத்தியில் கூறினர்.

அ. தி. மு. க. வேறு கட்சிகளுடன் சேர்ந்து கூட்டாட்சி நிறுவும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

வரப்போகும் சட்டமன்ற தேர்தலில் அ. தி. மு. க. கூடுமானவரை அதிக தொகுதிகளில் போட்டியிடுமென்றும் அவர் தெரிவித்தார்.

அ. தி. மு. க. வுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஏனைய கட்சிகள் அ. தி. மு. க. தனித்து ஆட்சி நிறுவும் நிலையை ஒப்புக்கொண்டு அதற்கு முழு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்க முன்வந்துள்ளதாகவும் அவர் கூறினர்.

## 50 ஆண்டுகள் சமூகசேவைக்குப் பாராட்டு

(யாழ்ப்பாணம்)
50 ஆண்டுகள் சமூகசேவை செய்ததற்காக, கச்சாய்க் கிராமசபை முன்னாள் தலைவர் திரு. தா. சந்திரசேகரம்பிள்ளைக்குப் பாராட்டு வழங்கப்பட்டது.

விடத்தல் பளைப்பிள்ளையார் கோவில் முன்றலில் திரு. வி. நடராசா தலைமையில் நடைபெற்ற இப்பாராட்டுவிழாவில் பலர் உரையாற்றினர்கள்.

திரு. சந்திர சேகரம்பிள்ளை கச்சாய்க் கிராமசபையில் 30 ஆண்டுகள் உறுப்பினராகவும், 6 ஆண்டுகள் தலைவராகவும் பணியாற்றி, சங்க எல்லைகளை விசாலித்தும் புதிய மண்டபம் அமைத்தாரென்றும் பாராட்டின் போது தெரிவிக்கப்பட்டது. (க-அ)

## பிரதி...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]
சாட்சியங்களிலிருந்து தெரிய வந்துள்ளது. திரு. பெர்னண்டோ நேற்று மரணமானார் இக்கொலைச்சம்பவம் தொடர்பாக இருவர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். [ம]

## அச்சுக்கூட ஊழியர் பிரச்னை பற்றிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)
அச்சுக்கூட ஊழியர்களின் கைத்தொழில், பாதுகாப்பு, சுகாதாரம் சேமநலம் போன்ற விஷயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள மாவட்ட தொழிற்சாலை பரிசோதனை பொறியிலாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட பரிசோதனை தொழிற்சாலை பொறியிலாளர் கே. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ். நகரிலுள்ள அச்சுக்கூடங்களின் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது தொழிற்சாலைகளின் பாதுகாப்பு சுகாதாரம், சேமநலம் பாதுகாப்பு தொழிற்சாலைகளில் பொதுவாகப் பாவனையிலுள்ள இயந்திரங்கள் தொழிற்படும் மாதிரி முறைகள் தொழிற்சாலையில் நிகழக்கூடிய விபத்துக்கள் இயந்திரங்களால் ஆபத்து விளைவிக்கும் பகுதிகளைக் காப்பிடும் முறைகள் வேலைத்தலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பாதுகாப்பு போன்ற பலவிடயங்கள் பற்றிக்கலந்துரையாடலில் இடம் பெற்றன. [கொ]

மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்
உங்களை
திருச்சிராப்பள்ளி, மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச் செல்ல
மற்றும்
பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக், உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை
கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்.,
தபால் பெட்டி இல: 92
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8154
பயணம் உங்களது! - சௌகரியமாக்குவது எங்களது!!

## மரண அறிவித்தல்

### வே. க. வல்லிபுரம்

துன்னாலை வடக்கைச் சேர்ந்த சமூகத் தொண்டரும், கட்டைவேலி பிரதேச கூட்டுறவுச் சங்க இயக்குனருமான வே. க. வல்லிபுரம் காலமானார். அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், கமலேஸ்வரன் (வேலை மேற்பார்வையாளர்), சிவானந்த விக்னேஸ்வரன் (இலங்கை வங்கி, மாங்குளம்), கிருஷ்ணராசா (பெருந்தெருக்கள் திணைக்களம்), நடராசா, சிவசோதிராசா, அற்புதராசா, அருள்வரதரர்சா, கமலேஸ்வரி, பாக்கியலட்சுமி, இராசேஸ்வரி, நகுலேஸ்வரி, தயாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சுகுமாரன் (பொலிஸ்நிலையம், வாழைச்சேனை), இராசேஸ்வரி (ஆசிரியை, துணுக்காய்), இராமச்சந்திரன் (மக்கள் வங்கி) ஆகியோரின் மாமனாரும், திருஞானசம்பந்தர், தங்கரத்தினம், வள்ளியம்மை, கோபாலகிருஷ்ணன் (பொலிஸ் பரிசோதகர், கொழும்பு) ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரது ஈமைக்கிரியைகள் துன்னாலை தியான் மயானத்தில் இன்று 14-3-80 ந்திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறோம்.

5217 அன்னாரின் மனைவியும், மக்களும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ... கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் மார்ச்மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QD/5948/78, The Eelanaadu P. B. No.49, Telegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org